Registered as a News Paper in Sri Lanka: பக்கங்கள் 04 விலை ரூபா: 4-00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் நாளிதழ் PEOPLES DAILY

நாள்: 01 தை (10 - 01 - 1991) வியாழக்கிழமை ஓசை: 326

## வளைகுடா போரினால் தினமும் 30லட். பீப்பா எண்ணெய் எரியும்

(லண்டன்)

வளைகுடாவில் போர் மூளுமானால், குவைத்தின் எண்ணெய் வயல்கள் பாரிய தீக்களமாக மாறும். உலகளாவிய ரீதியில் பெரும் சூழலியல் அனர்த்தங்கள் ஏற்படும். இவ்வாறு சர்வதேச விஞ்ஞான மாநாடொன்று லண்டனில் கருத்து வெளியிட்டுள்ளது. குவைத்திலிருக்கும் எண்ணெய்க் கிணறுகளுக்கு சராசரி கண்ணிவெடிகளைப் புதைத்துள்ளது. ஈமார் (4 ஆம் பக்கம் பார்க்க)

தமிழீழப்பகுதியில் சமாதானத்திற்கும், சகஜ வாழ்க்கைக்கும்

# 7 நாள் யுத்த நிறுத்த அறிவிப்பு

# நம்பிக்கையூட்டவில்லை

## விடுதலைப்புலிகள் தலைமை செயலகம் அறிவிப்பு

(நமது நிருபர்)

சிறிலங்கா அரசாங்கத்தின் ஏழுநாள் யுத்தநிறுத்த அறிவிப்பும், நடவடிக்கைகளும் நம்பிக்கை ஊட்டுபவையாக இல்லை. இந்த நிலையில் சிறிலங்கா அரசாங்கத்தால் அறிவிக்கப்படும் காலவரையறையற்ற யுத்தநிறுத்தமும், நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்கான அழைப்புமே தமிழீழப் பகுதியில் சமாதானத்தையும், சகஜ வாழ்க்கையையும் உருவாக்கக் கூடியன என விடுதலைப்புலிகள் தலைமைச்செயலகம் நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக நேற்று வெளியிடப்பட்ட அறிக்கையின் முழு விபரமும் வருமாறு: தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் போர் நிறுத்தத்தை மீறி வருவதாகச் சிறிலங்கா அரசு முன்வைத்துள்ள குற்றச்சாட்டை நாம் திட்டவட்டமாக நிராகரிக்கிறோம். சென்ற மாதம் 31 ஆம் திகதி நள்ளிரவிலிருந்து எமது இயக்கம் ஒருதலைப்பட்சமாக போர்நிறுத்தப் பிரகடனம் செய்ததிலிருந்து சிறிலங்கா ஆயுதப்படைகளே போர் நிறுத்தத்தை தொடர்ச்சியாக மீறிவருவதுடன் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளிலும் இறங்கியுள்ளன. புத்தாண்டு பிறந்ததிலிருந்து கடந்த 8 நாட்களில் மொத்தம் 39 போர் மீறல் சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. ஒருபுறம் போர் நிறுத்தத்தை மீறிக்கொண்டு மறுபுறம் பழியை எமது இயக்கம் மீது சுமத்திவிட அரசாங்கம் முனைகிறது. இதிலிருந்து தமிழீழத்தில் சமாதானத்தையும் சகஜ நிலையையும் உண்டுபண்ணுவதில் சிறிலங்கா அரசுக்கு உண்மையான ஆர்வ (4ஆம் பக்கம் பார்க்க)

## வடபகுதி நாய்களுக்கும் சிறிலங்கா ராணுவம் அச்சம்

(கொழும்பு)

சிறிலங்கா இராணுவத்திற்கு எதிராக நடக்கும் போரில் பயன்படுத்துவதற்கென வளர்ப்பு நாய்களை விடுதலைப்புலிகள் பயிற்றுவிப்பதாக கொழும்பில் இராணுவ அதிகாரிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.

கடந்த ஒன்பது நாட்களாக அமுலில் இருந்து வரும்போர் நிறுத்தத்தை விடுதலைப் புலிகள் மீறிவருவதாகவும், இராணுவ முகாம்களைச் சூழவுள்ள பகுதிகளில் இருக்கும் மிதிவெடிகளைக் கண்டறிய நாய்கள் பயன்படுத்தப்படலாம் எனவும் கொழும்பில் இராணுவ வட்டாரங்கள் கூறியுள்ளன.

## சுன்னாகம் தபாலகத்தில்

## குமணவில் மருந்தும்

(யாழ்ப்பாணம்)

நேற்று பருத்தித்துறைக்கு வந்துசேர்ந்த குமணை என்ற கப்பலில் பிரசத்திய சுகாதார நிலையத்திற்குரிய ஒரு தொகுதி மருந்துப்பொருள்களும், யாழ்: போதனா வைத்தியசாலைக்கான ஒட்சிசன் சிலிண்டர் (4 ஆம் பக்கம் பார்க்க)

## நான்காம் கட்ட விநியோகத்தில் வழமைபோல் அரிசி கிடைக்கும்

(யாழ்ப்பாணம்)

விசேட உலர் உணவு விநியோகத்தின் நான்காம் கட்டம் நடைமுறைப்படுத்தப்படும் போது வழமையான விநியோக அளவில் அரிசி வழங்கப்பட இருக்கின்றது.

போதியளவில் அரிசி இருப்பில் இல்லாத காரணத்தினாலேயே மூன்றாம் கட்ட விநியோகத்தில் சீனி, மா போன்றவற்றிற்கான ஒதுக்கீடு அதிகரிக்கப்பட்டுள்ளது.

எனினும் 4ஆம் கட்ட விநியோகத்திற்கு தற்போது கப்பலில் எடுத்துவரப்பட்ட அரிசி (4ஆம் பக்கம் பார்க்க)

## மா விலை ஒரு ரூபாவால் குறைப்பு

(கொழும்பு)

உலகச் சந்தையில் கோதுமை மாவின் விலை குறைக்கப்பட்டிருப்பதனை (4ஆம் பக்கம் பார்க்க)

அசாம் ஐ. வி. முன்னணிக்கும் புலிகளுக்கும் தொடர்பு:

## இந்தியமத்திய அரசாங்கத்தின் அபாண்டமான குற்றச்சாட்டு

அசாம் ஐக்கிய விடுதலை முன்னணியினரும், ஆந்திரப் பிரதேசத்து நக்சல்பாரி தீவிரவாதிகளும் தமிழீழவிடுதலைப் புலிகளுடன் தொடர்பு இருப்பதாக இந்திய மத்திய அரசு தெரிவித்த குற்றச்சாட்டை நாம் நிராகரிக்கின்றோம். இது எந்தவித ஆதாரமுமற்ற தீய நோக்கம் கொண்ட ஒரு கட்டுக்கதையாகுமென விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

மேலும் அவ்வறிக்கையில் தமிழீழ விடுதலைப்புலிகளைப்பற்றி ஒரு தப்பான அபிப்பிராயத்தையும், அச்ச உணர்வையும் இந்திய மக்கள் மத்தியில் ஏற்படுத்தும் நோக்குடன் மத்திய அரசு இந்தக் குற்றச்சாட்டை எம்மீது சுமத்தியுள்ளது.

இத்தகைய அபாண்டமான குற்றச்சாட்டுகளையும், பொய்ப்பிரசாரங்களையும் விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கெதிராகப் பயன்படுத்துவது இந்திய மத்திய அரசுக்கு இதுதான் முதற்தடவையல்ல (4ஆம் பக்கம் பார்க்க)

புலிகள் – அசாம் கிளர்ச்சியாதிகள் தொடர்பு:

## ஜனநாயக அரசைக் கவிழ்க்க திரித்துக் கூறப்படும் கதை

(சென்னை)

விடுதலைப் புலிகளுக்கும், அசாம் புரட்சியாளர்களுக்கும் ...

கூறப்படும் கதை என்று தேற்று முன்தினம் வந்தவாசி (4 ஆம் பக்கம் பார்க்க)

## தேசிய பாடசாலையில் தனி ஆங்கில அழைப்பிதழ்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத் தேசிய பாட...

# விடுதலைப்புலிகள் தலைமை செயலகம் அறிவிப்பு

(நமது நிருபர்)

சிறிலங்கா அரசாங்கத்தின் ஏழுநாள் யுத்தநிறுத்த அறிவிப்பும், நடவடிக் கைகளும் நம்பிக்கை ஊட்டுபவையாக இல்லை. இந்த நிலையில் சிறிலங்கா அர சாங்கத்தால் அறிவிக்கப்படும் காலவரையறையற்ற யுத்தநிறுத்தமும், நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்கான அழைப்புமே தமிழீழப் பகுதியில் சமாதானத்தையும், சகஜ வாழ்க்கையையும் உருவாக்கக் கூடியன என விடுதலைப்புலிகள் தலைமைச்செயல கம் நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக நேற்று வெளியிடப்பட்ட அறிக்கை யின் முழு விபரமும் வருமாறு: தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் போர் நிறுத்தத்தை மீறி வருவதாகச் சிறிலங்கா அரசு முன்வைத்துள்ள குற்றச் சாட்டை நாம் திட்டவட்டமாக நிராகரிக்கிறோம். சென்ற மாதம் 31 ஆம் திகதி நள்ளிர விலிருந்து எமது இயக்கம் ஒரு தலைப்பட்சமாக போர்நிறுத் தப் பிரகடனம் செய்ததிலி ருந்து சிறிலங்கா ஆயுதப்படை களே போர் நிறுத்தத்தை தொடர்ச்சியாக மீறிவருவது டன் ஆத்திரமூட்டும் நடவடிக் கைகளிலும் இறங்கியுள்ளன. புத்தாண்டு பிறந்ததிலிருந்து கடந்த 8 நாட்களில் மொத் தம் 39 போர் மீறல் சம்ப வங்கள் நிகழ்ந்துள்ளன. ஒரு புறம் போர் நிறுத்தத்தை மீறிக்கொண்டு மறுபுறம் பழியை எமது இயக்கம் மீது சுமத்திவிட அரசாங்கம் முனைகிறது. இதிலிருந்து தமி ழீழத்தில் சமாதானத்தையும் சகஜ நிலைமையையும் உண்டு பண்ணுவதில் சிறிலங்கா அர சுக்கு உண்மையான ஆர்வ

(4ஆம் பக்கம் பார்க்க)

டம் நடைமுறைப்படுத்தப்ப டும் போது வழமையான விநியோக அளவில் அரிசி வழங்கப்பட இருக்கின்றது.

போதியளவில் அரிசி இருப் பில் இல்லாத காரணத்தினா லேயே மூன்றாம் கட்ட விநி யோகத்தில் சீனி, மா போன் றவற்றிற்கான ஒதுக்கீடு அதி கரிக்கப்பட்டுள்ளது.

எனினும் 4ஆம் கட்ட விநி

## மா விலை ஒரு ரூபாவால் குறைப்பு

(கொழும்பு)

உலகச் சந்தையில் கோதுமை மாவின் விலை குறைக்கப்பட்டிருப்பதனை

(4ஆம் பக்கம் பார்க்க)

## வடபகுதி நாய்களுக்கும் சிறிலங்கா ராணுவம் அச்சம்

(கொழும்பு)

சிறிலங்கா இராணுவத் திற்கு எதிராக நடக்கும் போரில் பயன்படுத்துவதற் கென வளர்ப்பு நாய்களை விடுதலைப்புலிகள் பிரட்டி வருவதாக கொழும்பில் இரா ணுவ அதிகாரிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.

கடந்த ஒன்பது நாட்களாக அமுலில் இருந்து வரும்போர் நிறுத்தத்தை விடுதலைப் புலி கள் மீறிவருவதாகவும், இரா ணுவ முகாம்களைச் சூழவு ள்ள பகுதிகளில் இருக்கும் மிதிவெடிகளைக் கண்டறிய நாய்கள் பயன்படுத்தப்பட லாம் எனவும் கொழும்பில் இராணுவ வட்டாரங்கள் கூறி யுள்ளன.

## அசாம் ஐ. வி. முன்னணிக்கும் புலிகளுக்கும் தொடர்பு:

# இந்தியமத்திய அரசாங்கத்தின் அபாண்டமான குற்றச்சாட்டு

அசாம் ஐக்கிய விடுதலை முன்னணியினரும், ஆந்திரப் பிரதேசத்து நக்சல்பாரி தீவிர வாதிகளும் தமிழீழவிடுதலைப் புலிகளுடன் தொடர்பு இருப் பதாக இந்திய மத்திய அரசு தெரிவித்த குற்றச்சாட்டை நாம் நிராகரிக்கின்றோம். இது எந்தவித ஆதாரமுமற்ற தீய நோக்கம் கொண்ட ஒரு கட்டுக் கதையாகுமென விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி நேற்று விடுத்த அறிக்கை ஒன் றில் தெரிவித்துள்ளது.

மேலும் அவ்வறிக்கையில் தமிழீழ விடுதலைப்புலி களைப்பற்றி ஒரு தப்பான அபிப்பிராயத்தையும், அச்ச உணர்வையும் இந்திய மக்கள் மத்தியில் ஏற்படுத்தும் நோக் குடன் மத்திய அரசு இந்தக் குற்றச்சாட்டை எம்மீது சுமத் தியுள்ளது.

இத்தகைய அபாண்டமான குற்றச்சாட்டுகளையும், பொய்ப்பிரசாரங்களையும் விடுதலைப்புலிகள் இயக்கத் திற்கெதிராகப் பயன்படுத்து வது இந்திய மத்திய அரசிற்கு இதுதான் முதற்தடவையல்ல;

(4ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் — அசாம் கிளர்ச்சிவாதிகள் தொடர்பு:

# ஜனநாயக அரசைக் கவிழ்க்க திரித்துக் கூறப்படும் கதை

(சென்னை)

விடுதலைப் புலிகளுக்கும், அசாம் புரட்சிவாதிகளுக்கும் இடையில் தொடர்பு இருப்ப தாகவும், இரு தரப்பினருக் கும் தமிழ்நாட்டு அரசாங்கம் உதவியளிப்பதாகக் கூறுவது மக்களால் ஜனநாயக முறைப் படி தேர்ந்தெடுக்கப்பட்ட அர சாங்கத்தைப் பதவி நீக்கம் செய்வதற்காகத் திரித்துக் கூறப்படும் கதை என்று நேற்று முன்தினம் வந்தவாசி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தேசிய பாடசாலையில் தனி ஆங்கில அழைப்பிதழ்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத் தேசிய பாட சாலை ஒன்றில் 'தமிழ் மெல் லச் சாகிறது'. அப் பாட சாலையானது அதன் நூற் றாண்டுவிழா தொடர்பான செயற்குழுக்கூட்ட அழைப்பி தழை தனி ஆங்கில மொழி யில் அச்சிட்டுள்ளது. மேலும் அழைப்பிதழில் வெற்றிடங்க ளும், கூட்ட நிகழ்ச்சி நிரலும் ஆங்கிலத்தில் கையினால் எழு தப்பட்டுள்ளது. தமிழ் வளர்த்த பெரியோர்கள் கூடி வள ர்த்த கலைக்கோயிலில் தமிழு க்கு இந்த நிலை!

## சுன்னாகம் தபாலகத்தில் பணக் கொடுப்பனவுகள்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் தபாலகத்தில் இன்று வியாழன் முதல்மூன்று நாட்களுக்கு உள்நாட்டு, வெளிநாட்டு மணி ஓடர்கள், பிரிட்டிஷ் போஸ்ரல் ஓடர் கள், தேசிய சேமிப்பு வங்கிப் பணமீட்பு ஆகியவற்றிற்கும் பணக்கொடுப்பனவுகள் மேற் கொள்ளப்படவுள்ளன.

ஏனைய தபாலகங்களில் மேற்படி கொடுப்பனவுகளைப் பெறமுடியாதவர்களும், தத் தமது மணி ஓடர்கள் சகி தம் அதற்குரிய 'அற்வைஸ்'

(4ஆம் பக்கம் பார்க்க)

## தெரிவான ஆசிரியர்கள் பெயர்ப்பட்டியல் கலாசாலையில்

(யாழ்ப்பாணம்)

ஆசிரியர் பயிற்சிக் கலாசா லைக்குத் தெரிவான ஆசிரிய மாணவர்களின் பட்டியல்கள் அவர்களுக்குரிய பயிற்சிக் கலாசாலைகளில் வைக்கப்பட் டுள்ளதாக யாழ். கல்வித் திணைக்களம் அறிவித்துள் ளது.

கொழும்பில் நடைபெற்ற நேர்முகப் பரீட்சையில்

(4ஆம் பக்கம் பார்க்க)

## மக்கள் வங்கிக்கு வரும் பணம் கப்பலில் வைத்தே விநியோகம்

(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கிக்குக் 'குமண' கப்பலில் வரும் ரூபா 2 கோடி யே 50 லட்சம் பணம் கப்ப லில் வைத்தே வாடிக்கை நிறு வனங்களுக்கு வழங்கப்படும். தபால் கந்தோர், மற்றும் மக்கள் வங்கியுடன் தொடர் புடைய நிறுவனங்களின் தகுதி வாய்ந்த பிரதிநிதிகள் கப்ப லில் வைத்தே மக்கள் வங்கி முகாமையாளரிடமிருந்து பண த்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும். பணத்தை வெளி யில் மக்கள் வங்கிக் கிளை கள் மூலம் வழங்குவதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ள தாம்.

## ஆங்கில ஆசிரியர்களுக்கு பயிற்சியளிக்கத் திட்டம்

- சுந்தரலிங்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ்மாவட்டத்தில்ஆங்கில ஆசிரியர்களுக்கு பயிற்சி அளி ப்பதற்கு நடவடிக்கை எடுத் துள்ளதாக யாழ். கல்விப்ப ணிப்பாளர் தெரிவித்துள் ளார்.

யாழ். மாவட்டத்தில் பயி ற்சி பெறாத ஆசிரியர்கள் அதிகமாக இருப்பதனால் அவர்களுக்குரிய பயிற்சியை யாழ். மாவட்டத்தில் உள்ள ஆசிரியர் பயிற்சிக் கலாசா லைகளிலே வழங்குவதற்கு முயற்சி செய்து வருவதாக வும் இது சம்பந்தமாக கல்வி அமைச்சிற்கு அறிவித்துள்ள தாகவும் அவர் தெரிவித்தார்.

## ஆசிரியர்பயிற்சிக்கலாசாலை நேர்முகப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

பலாலி, கோப்பாய் ஆசிரி யர் பயிற்சிக் கலாசாலைகளு க்கு ஆசிரியர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 17 ஆம் திகதி ஆரம்பமாக உள்ளது.

பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை ஆசிரிய மாணவர் களுக்கு 17 ஆம் திகதி முதல் 22ஆம் திகதிவரை திருநெல் வேலியில் உள்ள மேற்படி கல் லூரியிலும் 23ஆம் திகதி முதல் 28ஆம் திகதிவரை கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை ஆசிரியர்களுக்கும் இந்த நேர் முகப் பரீட்சை நடைபெற உள்ளது.

## தொடரும் யுத்த நிறுத்த மீறல்

# ஒரு தமிழர் உயிருடன் ரயர் போட்டு எரிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத் தில் உள்ள படுவான்கரைப் பகுதியில் அப்பாவித் தமிழர் ஒருவர் சிறிலங்கா இராணு வத்தினால் உயிருடன் ரயர் போட்டு எரிக்கப்பட்டுள்ளார்.

கடந்த திங்கட்கிழமை மாலை 5.30 மணியளவில் வவுணதீவு பாலம் அருகில் உள்ள சிறிலங்கா இராணுவ

(4ஆம் பக்கம் பார்க்க)

## ஆளுநர் வாசஸ்தலநிதி எவ்வாறு பாதுகாப்பு நிதியானது?

சப்பிரமுவா மாகாணசபையில் மித்ரபாலா கேள்வி

(இரத்தினபுரி)

மாகாண ஆளுநரின் வாசஸ் தலம் அமைக்கவென ஒதுக் கப்பட்ட பதினைந்து லட்சம் ரூபா நிதியிலிருந்து பத்து லட் சம் ரூபாவை எவரது அனு மதியுடன் நிதியமைச்சர் தேசிய பாதுகாப்பு நிதிக்கு வழங்கினார். இதற்கு முதல வர் விளக்கமளிக்க வேண்டும்; இவ்வாறு சப்பிரமுவா மாகாண சபையில் எதிர்க்கட் சித்தலைவர் எச். ஆர். மித்ர பாலா கேள்வியெழுப்பியுள்ளார்.

மேலும் இந்தச்செயலானது மாகாண சபையின் இறை மைக்கு ஏற்பட்டுள்ள பெரும்

(4ஆம் பக்கம் பார்க்க)

## போர்நிறுத்தத்தைகண்காணிக்க சர்வதேச செஞ்சிலுவை மறுப்பு

(யாழ்ப்பாணம்)

உலகின் சர்வதேச செஞ் சிலுவைச் சங்கம் எப்பகுதியி லாவது யுத்தநிறுத்தத்தைக் கண்காணித்ததில்லை என்றும் அத்துடன் சர்வதேச செஞ் சிலுவைச் சங்க சாசனத்தில் அப்படி ஒரு நியதியில்லை என்றும் அதனால் அரசாங்கத் தின் கோரிக்கையை மறுத்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்

(4ஆம் பக்கம் பார்க்க)

**விளம்பரம்**

### தயா அச்சகம்

மீண்டும் றோணியோ தமிழ் ஆங்கில தட்டச்சு மற்றும் சகல அச்சு வேலைகளையும் சிறந்த முறையில் செய்து கொள்ள நாடுங்கள்: தயா அச்சகம். (மனோகரா தியேட்டர் அருகாமை) 138, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்

(B/1753)

### தவறிவிட்டது

K. சண்முகநாதன் ஆகிய நான் எனது கடிதத்துடன் சில புகைப்படங்களையும் யாழ். மாநகரசபை எல்லைக்குள் தவறவிட்டுவிட்டேன். தயவு செய்து இக்கடிதத்தினைக் கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். எனது முகவரி அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. K. சண்முகநாதன் இல 681/1 பருத்தித்துறை வீதி, நல்லூர். (R-1019)


# உலக வங்கி நிபுணர் குழு இரணைமடுவுக்கு விஜயம்

(கிளிநொச்சி)

உலக வங்கி நிபுணர்குழு ஒன்று கிளிநொச்சிக்கு விஜயம் செய்யவுள்ளது இக்குழு இரணைமடுக்குள நீர்ப்பாசனத்தை அபிவிருத்தி செய்வது சம்பந்தமாக மேற்படி குளத்தைப் பார்வையிட்டு பணத்தை ஒதுக்கீடு செய்வதற்காகவே கிளிநொச்சிக்கு விஜயம் செய்யவுள்ளது.

இது சம்பந்தமாக மேற்படி உலக வங்கி நிபுணர் குழுவைச் சந்திப்பதற்காக இரணைமடுக் குளத் திட்ட முகாமையாளர் திரு. கதிரவேலு கொழும்பு சென்றுள்ளார்.

கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு.க மாணிக்கவாசகர் மேற்கொண்ட முயற்சியினால் உலகவங்கி நிபுணர் குழுவொன்று ஏற்கனவே கிளிநொச்சிக்கு விஜயம் செய்யத் திட்டமிட்டிருந்தது. நாட்டு நிலைமை சீரில்லாததால் அவ் விஜயம் ஒத்திவைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (49)

# மூன்று சமூகங்கள் உரிமையை பாதுகாக்க ஆணைக்குழு

(கொழும்பு)

அரசாங்கத்தின் புதிய மொழிக் கொள்கைக்கமைய மூன்று சமூகங்களின் உரிமைகளையும், சலுகைகளையும் பாதுகாக்க ஆறு உறுப்பினர்களைக் கொண்ட ஆணைக்குழு ஒன்றை அரசாங்கம் நியமித்துள்ளது.

அரச மொழிகள் திணைக்களம் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் விசேட தொகுதி ஒன்றைத் தயாரித்துத் தொகுத்து வெளியிடும் வேலையிலும் ஈடுபட்டுள்ளது.


## மகாபொல கொடுப்பனவு 89/90

### 1ஆம், 2ஆம் தவணைப் பணங்கள்

### நவம்பர், டிசெம்பர் - 90

பின்வரும் மாணவர்களுக்கு மேற்படி கொடுப்பனவுக்குரிய ஒழுங்குகள் கீழ்வரும் அட்டவணைப்படி செய்யப்பட்டுள்ளது.

1. கலைப்பீடம்

| | |
|---|---|
| 1-ம் வருட மாணவர்கள் | |
| கலைப் பிரிவு | (09-01-91)-9-00-12-00 |
| வர்த்தகப் பிரிவு | |
| வியாபார நிர்வாகப் பிரிவு | (15-01-91)-1-30-2-30 |
| 2-ம், 3-ம், 4-ம் வருட மாணவர்கள் | |
| (பிந்திப்பதிவு செய்தவர்கள்) | |
| கலைப் பிரிவு | (16-01-91,-9-00.12-00 |
| வர்த்தகப் பிரிவு | |
| வியாபார நிர்வாகப் பிரிவு | |

2. விஞ்ஞானபீடம்/மருத்துவபீடம்

| | |
|---|---|
| 1-ம் வருட மாணவர்கள் | |
| பௌதிக விஞ்ஞானம் | (09-01-91)-1-30-2-30 |
| உயிரியல் விஞ்ஞானம் | |
| மருத்துவபீடம் | (15-01-91)-9-00-12-00 |
| 2-ம், 3-ம், 4-ம் வருட விஞ்ஞான | |
| பீட மாணவர்கள் | 16-01-91)-1-30-2-30 |
| (பிந்திப் பதிவு செய்தவர்கள்) | |
| பௌதிக விஞ்ஞானம் | |
| உயிரியல் விஞ்ஞானம் | |

கொடுப்பனவின்போது சமர்ப்பிக்கப்பட வேண்டியவை:

1. பல்கலைக்கழக மாணவர் அடையாள அட்டை
2. மாணவர் பதிவுப் புத்தகம்
3. ரூ. 2/- பெறுமதியான முத்திரை

(B-184')

-பதிவாளர்



# நினைவு கூருகின்றோம்

## தை 10

1974 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற நான்காவது தமிழாராய்ச்சி மாநாட்டின்போது கொல்லப்பட்ட அப்பாவிப் பொதுமக்களான

இ. சிவானந்தம் (காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம்)
வே. கேசவராஜன் (தொல்புரம் மேற்கு)
ஆ. தில்லைநாயகம் (ஊர்காவற்றுறை)
சி. பொன்னுத்துரை (கோப்பாய் வடக்கு)
ப. சரவணபவன் (புலோலி கிழக்கு)
பி. அருளப்பு (யாழ்ப்பாணம்)
வை. யோகநாதன் (தெல்லிப்பளை)
நந்தகுமார் (சுழிபுரம்)
ஆறுமுகம் (நயன்மார்கட்டு)
ந. தேவரட்ணம் (யாழ்ப்பாணம்)

ஆகியோரை இந்நாளில் நினைவுகூருகின்றோம்.

எட்டுத் திசையிலும் புகழ்
பரப்பும் தமிழ் மணத்தை
ஏற்றிட முடியா ஆட்சியின்
கொடுமையை - உலகுக்கு
உணர்த்தும் உங்கள் மரணங்கள்!
எமமவர் நினைவில் அழியாத சித்திரங்கள்!
முற்றவெளியில் நட்டுவைத்த தூண்கள்
அஞ்சலிக்கு மட்டுமல்ல ஆராதனைக்கும்கூட...

**தமிழீழ மக்கள்** (B-1833)


## புதிய நிர்வாகக் குழு தெரிவு

(நாயன்மார்கட்டு)

நாயன்மார்கட்டு பாரதி மன்ற சனசமூக நிலையத்தில் கடந்த 30 ஆம் திகதி நடந்த வருடாந்த பொதுக் கூட்டத்தில் புதிய நிர்வாகக் குழுவினர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவராக சி சின்னராசா தெரிவு செய்யப்பட்டார். இதை அடுத்து செயலாளர், உபதலைவர், உபசெயலாளர் உட்பட 18 நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

மாதர் சங்கம் இந்து கலாசாரக் குழு கிறிஸ்தவ கலாசாரக் குழு என மூன்று உப குழுக்களும் தெரிவு செய்யப்பட்டன.

## 9ஆவது ஆண்டு நிறைவு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ் செவிப்புலனற்றோர் புனர்வாழ்வு நிலையத்தின் 9 ஆவது ஆண்டு நிறைவு விழா வரும் சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு கில்னர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

10.00 மணிக்கு நடைபெற இருக்கும் பொதுக் கூட்டத்திற்கு அ ஜோ பாலநாயகம் தலைமை வகிப்பார். தமிழீழ விடுதலைப்புலிகள் மக்கள்முன்னணியினர் யம். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் ராஜன், உள்ளூராட்சி ஆணையாளர் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

## முற்பணங்கள் வழங்கப்படும்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் முற்பணம் கோரி விண்ணப்பித்த ஆசிரியர்களுக்கு முற்பணம் வழங்கப்படும் என கல்விப்பணிப்பாளர் என். நடராஜா தெரிவித்துள்ளார்.

இந்த ஆசிரியர்களிடமிருந்து ஏற்கனவே பெறப்பட்டுள்ள இரு வருடச்சம்பள முற்பணம் ஆறுமாத சம்பள முற்பண விண்ணப்பங்களுக்குரிய முற்பணங்களே வழங்கப்பட உள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட கல்விப்பணிப்பாளர்நடராஜா அறிவித்துள்ளார்.

## தமிழாராய்ச்சி மாநாட்டு ..

நடமாட்டத்தை முற்றாகக் கட்டுப்படுத்திய விடுதலைப் புலிகள் 1987 ஆம் ஆண்டு மார்ச் மாதம் பொலிசார் தங்கியிருந்த யாழ்ப்பாணப் பண்ணைப் பொலிஸ் விடுதியையும் தாக்கி அழித்துத்தரை மட்டமாக்கினர்.

பொலிஸாரின் நடமாட்டம் முற்றாகக் கட்டுப்படுத்தப்பட்டதாயினும் கோட்டையில் தங்கியிருந்த சிங்களச் சிப்பாய்களது துப்பாக்கிச் சூடுகள், ஷெல் அடிகள் மற்றும் விமானப்படையினரின் விமானத் தாக்குதல்கள், கடற்படை பீரங்கித் தாக்குதல்கள், ஹெலி சூடுகள் இவற்றின் மத்தியில் யாழ்ப்பாணக் கோட்டைக்கும் வீரசிங்கம் மண்டபத்திற்கும் இடை நடுவில் முற்றவெளி மைதானத்தில்


# கரைச்சி தெற்கு பல. நோ. கூ. சங்கம், கிளிநொச்சி.

மேற்படி எமது சங்கத்தின் பின்வரும் பதவிக்கு கீழ்வரும் தகைமையுள்ள இலங்கைப் பிரசைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன விண்ணப்பிப்போர் "தலைவர், கரைச்சி தெற்கு ப. நோ. கூ. சங்கம், கிளிநொச்சி" என்னும் விலாசத்



# இலங்கைத் திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய நிலைய

## அறிவித்தல்

### உயர்தொழில் ஆங்கில கற்கை நெறி இறுதிப் பரீட்சை 1990

(Certificate in Professional English Course Final Exam 1990)

மேற் குறிப்பிட்ட பரீட்சை 1991 ஜனவரி ...

ப. சரவணபவன் (புலோலி கிழக்கு)

பி. அருளப்பு (யாழ்ப்பாணம்)

வை. யோகநாதன் (தெல்லிப்பளை)

நந்தகுமார் (சுழிபுரம்)

ஆறுமுகம் (நயன்மார்கட்டு)

ந. தேவரட்ணம் (யாழ்ப்பாணம்)

ஆகியோரை இந்நாளில் நினைவுகூருகின்றோம்.

எட்டுத் திசையிலும் புகழ்
பரப்பும் தமிழ் மணத்தை
ஏற்றிட முடியா ஆட்சியின்
கொடுமையை - உலகுக்கு
உணர்த்தும் உங்கள் மரணங்கள்!
எமமவர் நினைவில் அழியாத சித்திரங்கள்!
முற்றவெளியில் நட்டுவைத்த தூண்கள்
அஞ்சலிக்கு மட்டுமல்ல ஆராதனைக்கும்கூட...

**தமிழீழ மக்கள்** (B-1833)


## நிறைவு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ் செவிப்புலனற்றோர் புனர்வாழ்வு நிலையத்தின் 9 ஆவது ஆண்டு நிறைவு விழா வரும் சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு கில்னர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. 10.00 மணிக்கு நடைபெற இருக்கும் பொதுக் கூட்டத்திற்கு அ. ஜோ பாலநாயகம் தலைமை வகிப்பார். தமிழீழ விடுதலைப்புலிகள்மக்கள்முன்னணியினர் யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் ராஜன், உள்ளூராட்சி ஆணையாளர் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் முற்பணம் கோரி விண்ணப்பித்த ஆசிரியர்களுக்கு முற்பணம் வழங்கப்படும் என கல்விப்பணிப்பாளர் என். நடராஜா தெரிவித்துள்ளார்.

இந்த ஆசிரியர்களிடமிருந்து ஏற்கனவே பெறப்பட்டுள்ள இரு வருடசம்பள முற்பணம் ஆறுமாத சம்பள முற்பண, விண்ணப்பங்களுக்குரிய முற்பணங்களே வழங்கப்பட உள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட கல்விப்பணிப்பாளர்நடராஜா அறிவித்துள்ளார்.


கலைப் பிரிவு
வர்த்தகப் பிரிவு
வியாபார நிர்வாகப் பிரிவு — (16-01-91, 9-00-12-00

2. விஞ்ஞானபீடம்/மருத்துவபீடம்

1-ம் வருட மாணவர்கள்
பௌதிக விஞ்ஞானம் — (09-01-91)-1-30-2-30
உயிரியல் விஞ்ஞானம்
மருத்துவபீடம் — (15-01-91)-9-00-12-00
2-ம், 3-ம், 4-ம் வருட விஞ்ஞான பீட மாணவர்கள் — 16-01-91)-1-30-2-30
(பிந்திப் பதிவு செய்தவர்கள்)
பௌதிக விஞ்ஞானம்
உயிரியல் விஞ்ஞானம்

கொடுப்பனவின்போது சமர்ப்பிக்கப்பட வேண்டியவை:
1. பல்கலைக்கழக மாணவர் அடையாள அட்டை
2. மாணவர் பதிவுப் புத்தகம்
3. ரூ. 2/- பெறுமதியான முத்திரை

(B-184') -பதிவாளர்


## தமிழாராய்ச்சி மாநாட்டு ..

நடமாட்டத்தை முற்றாகக் கட்டுப் படுத்திய விடுதலைப் புலிகள் 1987 ஆம் ஆண்டு மார்ச் மாதம் பொலிசார் தங்கியிருந்த யாழ்ப்பாணப் பண்ணைப் பொலிஸ் நிலையத்தையும் தாக்கி அழித்துத்தரை மட்டமாக்கினர்.

பொலிஸாரின் நடமாட்டம் முற்றாகக் கட்டுப்படுத்தப் பட்டதாயினும் கோட்டையில் தங்கியிருந்த சிங்களச் சிப்பாய்களது துப்பாக்கிச் சூடுகள், ஷெல் அடிகள் மற்றும் விமானப்படையினரின் விமானத் தாக்குதல்கள், கடற்படை பீரங்கித்தாக்குதல்கள், ஹெலி சூடுகள் இவற்றின் மத்தியில் யாழ்ப்பாணக் கோட்டைக்கும் வீரசிங்கம் மண்டபத்திற்கும் இடை நடுவில் முற்றவெளி மைதானத்தில் அமைக்கப்பட்டிருந்த தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலைக்குள்ளான தமிழர்களின் நினைவுத் தூபிகளுக்கு அஞ்சலி செலுத்தமுடியாத இக்கட்டான நிலைமை பல வருடங்களாகவே இருந்துவந்தது.

இந்த அவலநிலைக்கும் இப்போது முற்றுப் புள்ளி வைக்கப்பட்டுவிட்டது. கடந்த வருடம் செப்ரம்பர்மாதம் 26ஆம் திகதி திலீபனின் மூன்றாம் ஆண்டு நினைவு தினத்தன்று விடுதலைப் புலிகள் யாழ்ப்பாணக் கோட்டையைக் கைப்பற்றி அங்கிருந்த இராணுவத்தினரை வெளியேற்றியதன் மூலம் கோட்டையைச் சூழவுள்ள பிரதேசமும் இராணுவத்தின் பிடிக்குள் இருந்து முற்றாக விடுவிக்கப்பட்டு சுயாதீனமாக்கப் பட்டுள்ளது. நான்காவது தமிழாராய்ச்சி மாநாட்டின்போது இறந்த அந்த ஒன்பேரையும் நினைவு கூரும் அதேவேளை அவர்களுக்காக அமைக்கப்பட்ட நினைவுத்தூபி முன்னால் சுயாதீனமாக நின்று எதுவித அச்சமோ, அச்சுறுத்தலோ இன்றி மலர்தூவி அஞ்சலி செலுத்தும் நிலைமை உருவாக்கப்பட்டமையும் எமது விடுதலைப் போராட்டத்தில் நாம் பெற்ற வெற்றிகளில் ஒன்று என்பதில் தமிழர்கள் பெருமைப்படலாம்.


# கரைச்சி தெற்கு பல. நோ. கூ. சங்கம், கிளிநொச்சி.

மேற்படி எமது சங்கத்தின் பின்வரும் பதவிக்கு கீழ்வரும் தகைமையுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பிப்போர் "தலைவர், கரைச்சி தெற்கு ப. நோ. கூ. சங்கம், கிளிநொச்சி" என்னும் விலாசத்திற்கு தபாலின் இடது பக்க மேல் மூலையில் பதவியின் பெயர் இடப்பட்டு 21-01-1991 அன்று நண்பகல் 12.00 மணிக்கு முன்னதாக கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ ஒப்படைத்து உறுதிப்படுத்தவும்.

## பொதுமுகாமையாளர் பதவி வெற்றிடம் (101/6)

1. சம்பள அளவுத்திட்டம் மாதம்:- 1305—60 தர 4—75 தர 11—2370ம் அங்கீகரிக்கப்பட்ட படிகள் யாவும்.

2. கல்வித் தகைமைகள்:-

அ. கூட்டுறவு ஊழியர் 7ஆவது சம்பளத்திட்டத்தில் முகாமை/மேற்பார்வை மட்டத்தில் மூன்று வருடத்துக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவு ஊழியர் 8ஆவது சம்பளத்திட்டத்தில் முகாமை/மேற்பார்வை மட்டத்தில் ஆறு வருடத்துக்குக்குறையாத அனுபவம்.

"அல்லது"

ஆ. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் அல்லது அதற்கிணையான பட்டத்துடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/தொழில்நுட்ப தாபனமொன்றின் முகாமை மட்டத்திலான பதவியில் நான்கு வருடத்திலான அனுபவம்.

"அல்லது"

இ. கூட்டுறவு பணியாளர் உயர்பிரிவு தராதரப்பத்திரம் அல்லது க. பொ. த உயர் தரத்தில் மூன்று பாடங்களிலான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/தொழில்நுட்பதாபனமொன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் ஆறு வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

3. வயது: 25 தொடக்கம் 40 வரை

குறிப்பு:-

1. சமீபத்தில் பெற்ற இரு நற்சாட்சிப்பத்திரங்களினதும், அனுபவ சான்றிதழ்களினதும், கல்விச்சான்றிதழ்களினதும், பிறப்பு அத்தாட்சிப்பத்திரத்தினதும் போட்டோ பிரதிகள் விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கப்படல் வேண்டும்.

2. மேற்படிபதவிக்கு விண்ணப்பிப்போரின் தகைமையுடையவர்களுக்கு 25-01-1991 முற்பகல் 10.00 மணிக்கு நேர்முகப்பரீட்சை எமது சங்கக் காரியாலயத்தில் (பரவிப்பாஞ்சான் கிளிநொச்சி) நடைபெறும்.

தலைவர் — 07-01-91
கரைச்சி தெற்கு ப. நோ. கூ. சங்கம்,
கிளிநொச்சி.

(B-1840)



# இலங்கைத் திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய நிலைய

## அறிவித்தல்

உயர்தொழில் ஆங்கில கற்கை நெறி இறுதிப் பரீட்சை 1990

(Certificate in Professional English Course Final Exam 1990)

மேற் குறிப்பிட்ட பரீட்சை 1991 ஜனவரி மாதம் 12, 13 ஆம் திகதிகளில் யாழ் பிராந்திய நிலையத்தில் நடைபெற உள்ளது. இக்கற்கை நெறி பரீட்சைக்குத் தோற்ற உள்ள மாணவர்கள், விபரங்களுக்கும் அனுமதி அட்டை பெறுவதற்கும் தொடர்பு கொள்ளவும்:

மு. தில்லைநாதன்
உதவிப்பணிப்பாளர்,
திறந்த பல்கலைக்கழகம்,
யாழ். பிராந்திய நிலையம்.

(B-1837)



# RADIO - T.V & VIDEO DECK

புதிய பயிற்சி நெறி ஆரம்பம்

**16 - I - 1991**

★ இலகு விளக்கம்
★ சிறந்த ஆசிரியர்
★ செய்முறையுடன் கூடிய துரித பயிற்சி நெறி

விபரங்களுக்கு:

**North Ceylon Technical Institute**
14 St Peter's Lane,
Hospital Road,
JAFFNA.

(B-1830)

## சிந்தனைக்கு

"தனி ஒருவனுக்கு உணவில்லை எனில்
இந்த ஜகத்தினை அழித்திடுவோம்"

— சுப்பிரமணிய பாரதியார்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம், 10-01-1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த.பெ.எண் 05

# "அவசியப் பண்டங்களும் அர்த்தமற்ற செய்திகளும்"

யாழ். குடாநாட்டில் நிமிடத்திற்கு நிமிடம் அத்தியாவசியப் பொருள்களின் விலைகளில் மாற்றம்; சந்தையில் குவிந்திருந்த பொருள்கள் மாயமாக மறைவு. இவற்றிற்கு வானொலிகளும் பத்திரிகைகளும்தான் மூல காரணமாகின்றன.

நேற்றுக்காலை யாழ்ப்பாணப் பகுதியில் சீனி, மண்ணெண்ணெய் சந்தையில் இல்லை. அதேவேளை நேற்று முன்தினம் காலை சீனி கிலோ 32 ரூபாவும், மாலை 36 ரூபாவும் விற்பனையாகியது. ஆனால் நேற்றுக் காலை சந்தையில் சீனி என்ற நாமமே இல்லை. இந்தத் திடீர்ப் பதுக்கலுக்கு நேற்று முன்தினம் இந்திய வானொலி திரித்து வெளியிட்ட ஒரு செய்தியே காரணமாகும்.

இந்திய வானொலி நேற்று முன்தினம் நண்பகல் தனது செய்தி அறிக்கையில் புலிகளுக்கு எதிராக சிறிலங்கா இராணுவம் தனது நடவடிக்கைகளை தொடர்ந்து நடத்தவுள்ளது என சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜேரட்னா தெரிவித்ததாக திரிபுடன் வெளியிட்ட செய்தியே நேற்று நடத்தப்பட்ட பதுக்கல் நடவடிக்கைக்கு முக்கியமான காரணமாகும். இந்திய வானொலியின் இந்தச் செய்தியானது சிறிலங்கா போர் ஓய்வைக் கைவிட்டு விட்டது என்ற தொனியிலேயே ஒலிபரப்பப்பட்டதும் இங்கு புரிந்துகொள்ளப்பட்டதுமாகும்.

இதேபோன்று பத்திரிகைகளின் செய்திகளும் விலைகளை நிர்ணயிப்பதில் முக்கிய பங்கெடுக்கின்றன. வவுனியாவில் மோதல், கொம்படியில் விமானத் தாக்குதல்கள், லொறிகள் வரத் தடை விதிக்கப்பட்டுள்ளன என்பன போன்ற சில உண்மையான செய்திகளும், பல பொறுப்பற்ற செய்திகளும் விலையைத் தீர்மானிக்கின்றன. கடையை வியாபாரி திறப்பதற்கு முன்னர் எங்கே விமானத் தாக்குதல் என்றே பார்க்கிறார். பின்னர் தனது விலை ஏற்றத்திற்கு விமானத் தாக்குதலை காரணமாக்குகின்றார்.

அதேவேளை விமானத் தாக்குதலால் வியாபாரி எந்தவிதத் தாக்குதலுக்கும் உள்ளாவதில்லை; பாதிக்கப்படுவது லொறி உரிமையாளர்களும் துவிச்சக்கரவண்டியில் பொருள்களை எடுத்துவரும் சிறுவியாபாரிகளும்தான்.

இந்த நிலையில் இருந்த இடத்தில் இருந்துகொண்டு வியாபாரிகள் புரியும் பதுக்கலும், கள்ளச் சந்தை நடவடிக்கைகளும் பகல் கொள்ளைக்கு ஒப்பானதாகும். இது ஒரு சமூக விரோதச் செயலுமாகும்.

கடந்த ஆறுமாத யுத்தத்தின்போதே தமிழ்ப்பகுதிக்கு பொருள்கள் வருவதில் முன் எப்பொழுதும் இல்லாத

# தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலைகள் [ ஒரு கண்ணோட்டம் ]

1974 ஆம் ஆண்டு தைமாதம் இதேதினத்தில் இடம்பெற்ற தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலைகளை நினைவு கூருமுகமாக கடந்த இரவு புலிகளின் குரல் வானொலியில் ஒலிபரப்பான கட்டுரை அப்படியே பிரசுரமாகிறது.

1974ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 4ஆம் திகதி தொடக்கம் 10ஆம் திகதிவரை யாழ்ப்பாணத்தில் நான்காவது அனைத்துலக தமிழாராய்ச்சி மாநாடு நடைபெற்றது; இம்மாநாட்டை நடாத்தவிடாமல் குழப்பியடிப்பதில் அப்போதைய சிறிமாவோ பண்டாரநாயகாவின் இனவாத அரசு தீவிரமாகச் செயற்பட்டது. முதலில் இம்மாநாட்டைக் கொழும்பிலே நடாத்துமாறும் யாழ்ப்பாணத்தில் நடத்த வேண்டாம் எனவும் கூறிய சிறிமாவோ பண்டாரநாயகாவின் அரசு பல தடைகளைப் போட்டது. கொழும்பிலே நடாத்தினால்தான் இலங்கை அரசின் உதவி கிடைக்கும் எனக்கூறி நின்றது; ஆனால் இம்மாநாட்டைக் கொழும்பிலே நடாத்துவதில் அர்த்தம் இல்லை எனவும் அதனைத் தமிழ் மக்களது மண்ணில் - யாழ்நகரில் நடாத்துவதே அம்மாநாட்டிற்கு சிறப்பைத் தேடித்தரும் எனவும் அப்போதுதான் ஏகோபித்த தமிழ் மக்களது பங்களிப்பும் ஆதரவும் இம்மாநாட்டிற்குக் கிடைக்க வழியேற்படும் எனவும் உலகத் தமிழாராய்ச்சி மன்ற இலங்கைக் கிளையினர் குறிப்பிட்டனர். இந்த நிலையில் இலங்கைக் கிளையின் தலைவராகவிருந்த நீதியரசர் H. W. தம்பையா அவர்கள் தமிழாராய்ச்சி மாநாடு யாழ்ப்பாணத்தில் இடம்பெறுவதனை விரும்பாமையால் மாநாட்டிலிருந்தும் ஒதுங்கிக் கொண்டார். இதனால் காலஞ்சென்ற பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்கள் இலங்கைக் கிளையின் தலைவராகப் பொறுப்பேற்று மாநாட்டினை யாழ்ப்பாணத்திலேயே நடாத்துவது என முடிவு செய்தார். இதற்கு மறைந்த தமிழ்த் தூதுவர் தனிநாயகம் அடிகளார் உட்பட பல தமிழ் அறிஞர்கள் பெரும் ஆதரவு கொடுத்தனர்.

தமிழ் மக்களால் மதிக்கப்படும் தமிழ் அறிஞர்கள் எல்லோரும் ஒன்று கூடி யாழ்ப்பாணத்தில் இம்மாநாட்டை நடாத்துவது என்ற முடிவை எடுத்த பின்னர்- இலங்கை அரசு இம்மாநாட்டைக் குழப்புவதில் பெரும் அக்கறை காட்டி வந்தது; இம்மாநாட்டில் கலந்து கொள்வ [illegible]

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் கோலாகலமாக மாநாடு ஆரம்பமானதோடு வேம்படி மகளிர் கல்லூரியில் கண்காட்சியும் யாழ்ப்பாணம் திறந்தவெளி அரங்கில் கலை நிகழ்ச்சிகளுமாக இடம்பெற்று மாநாடு சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருந்தது; யாழ்ப்பாண நகரம் பெரும் விழாக்கோலம் பூண்டு காட்சி கொடுத்தது; மாநாடு வெற்றிகரமாக நடைபெற்றமை கண்டு மனம் பொறுத்துக் கொள்ளாத அப்போதைய யாழ். மேயர் துரையப்பா மாநாட்டின் இறுதி நாளான 10ஆம் திகதி மாநாட்டைக் குழப்பும் முயற்சியில் தீவிரமாக ஈடுபடலானார். அன்றைய தினம் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்திற்கு முன்னால் இடம் பெற்ற பரிசளிப்பு வைபவத்தையும் வெளிநாட்டு அறிஞர் வழியனுப்பு வைபவத்தையும் குழப்பு முகமாக யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரியாகவிருந்த ஏ.எஸ்.பி. சந்திரசேகராவின் தலைமையில் ஒரு பொலிஸ் பட்டாளத்தையே ஏவி விட்டார்;

யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த சிங்களப் பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தும் மின்வயர்களை அறுத்து வீழ்த்தியும் செய்த அடாவடித்தனங்களால் ஒன்பது தமிழர்கள் (இவர்களில் பெரும்பாலானோர் இளைஞர்கள்) அநியாயமாக வீரசிங்கம் மண்டப முன்றலில் வைத்து உயிர்காவு கொள்ளப்பட்டனர், பெண்கள் அவமானப்படுத்தப்பட்டனர். அங்கே கூடியிருந்த சுமார் பத்தாயிரம் மக்கள் அவலப்பட்டனர். பொலிஸாரின் தடியடிப் பிரயோகத்தினால் பலர் படுகாயமுற்றனர். பலர் உடைமைகளை இழந்தனர்.

இந்த அவல நிகழ்வு தமிழ் இளைஞர்களை புதிய [illegible]

துரையப்பாவுக்கும் தன்னுடைய மனதிற்குள் மரண தண்டனை விதித்த அவன் அதனை நிறைவேற்றப் பல முயற்சிகளை மேற்கொண்டான். அவனது இந்த முயற்சிகள் எமது போராட்ட வரலாற்றில் ஒரு திருப்பு முனைக்கு வித்திட்டன; ஆயுதப் போராட்டத்தின் மூலமே எம் மீது போடப்பட்டுள்ள அடிமை விலங்கை ஒடித்தெறிய முடியும் என்பதில் அவன் அசைக்க முடியாத நம்பிக்கையும் கொண்டான்; அவன் 1974 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 5ஆம் திகதி தியாக மரணமடைந்தான்; அவனது ஆவலைப் பூர்த்தி செய்ய இளைஞர் சமுதாயம் திரண்டது. அவனது மரணம் பல வீர இளைஞர்களை போராட்டத்துடன் இணைத்தது. இந்த வகையில் வீர இளைஞர்களது படையணியாக 1976 ஆம் ஆண்டு மே மாதம் 5ஆம் திகதி விடுதலைப்புலிகள் இயக்கம் புதிய வடிவம் பெற்றது. இவ்வியக்கமே ஸ்தாபனமயப்படுத்தப்பட்ட நிலையில் விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்த முதல் இயக்கமாகவும் விளங்கியது;

இவ்வியக்கத்தின் முதல் நடவடிக்கையாக நான்காவது தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலைகளுக்கு மூலகாரணமாக இருந்த மேயர் அல்பிரட் துரையப்பாவுக்கு பொன்னாலையில் வைத்து மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது. இந்த நடவடிக்கைக்கு விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களே தலைமை வகித்தார். அவர் தலைமையிலான போராளிகள் தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலைக்குக் காரணமான இருந்த துரையப்பாவுக்கு மரண தண்டனை நிறைவேற்றி [illegible] னது [illegible] தோடு ஆயுதப் போராட்டத்திற்கு உத்வேகமும் [illegible] னார்கள்.

நான்காவது தமிழாராய்ச்சி மாநாட்டின் போது இறந்த 9 தமிழர்களுக்கும் [illegible] வருடம் அஞ்சலி செலுத்து [illegible]

நேற்று முன்தினம் காலை சீனி கிலோ 32 ரூபாவும், மாலை 36 ரூபாவும் விற்பனையாகியது. ஆனால் நேற்றுக் காலை சந்தையில் சீனி என்ற நாமமே இல்லை. இந்தத் திடீர்ப் பதுக்கலுக்கு நேற்று முன்தினம் இந்திய வானொலி திரித்து வெளியிட்ட ஒரு செய்தியே காரணமாகும்.

இந்திய வானொலி நேற்று முன்தினம் நண்பகல் தனது செய்தி அறிக்கையில் புலிகளுக்கு எதிராக சிறிலங்கா இராணுவம் தனது நடவடிக்கைகளை தொடர்ந்து நடத்தவுள்ளது என சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜேரட்னா தெரிவித்ததாக திரிபுடன் வெளியிட்ட செய்தியே நேற்று நடத்தப்பட்ட பதுக்கல் நடவடிக்கைக்கு முக்கியமான காரணமாகும். இந்திய வானொலியின் இந்தச் செய்தியானது சிறிலங்கா போர் ஒய்வைக் கைவிட்டு விட்டது என்ற தொனியிலேயே ஒலிபரப்பப்பட்டதும் இங்கு புரிந்துகொள்ளப்பட்டதுமாகும்.

இதேபோன்று பத்திரிகைகளின் செய்திகளும் விலைகளை நிர்ணயிப்பதில் முக்கிய பங்கெடுக்கின்றன. வவுனியாவில் மோதல், கொம்படியில் விமானத் தாக்குதல்கள், லொறிகள் வரத் தடை விதிக்கப்பட்டுள்ளன என்பன போன்ற சில உண்மையான செய்திகளும், பல பொறுப்பற்ற செய்திகளும் விலையைத் தீர்மானிக்கின்றன. கடையை வியாபாரி திறப்பதற்கு முன்னர் எங்கே விமானத் தாக்குதல் என்றே பார்க்கிறார். பின்னர் தனது விலை ஏற்றத்திற்கு விமானத் தாக்குதலை காரணமாக்குகின்றார்.

அதேவேளை விமானத் தாக்குதலால் வியாபாரி எந்தவிதத் தாக்குதலுக்கும் உள்ளாவதில்லை. பாதிக்கப்படுவது லொறி உரிமையாளர்களும் துவிச்சக்கரவண்டியில் பொருள்களை எடுத்துவரும் சிறுவியாபாரிகளும்தான்.

இந்த நிலையில் இருந்த இடத்தில் இருந்துகொண்டு வியாபாரிகள் புரியும் பதுக்கலும், கள்ளச் சந்தை நடவடிக்கைகளும் பகல் கொள்ளைக்கு ஒப்பானதாகும். இது ஒரு சமூக விரோதச் செயலுமாகும்.

கடந்த ஆறுமாத யுத்தத்தின்போதே தமிழ்ப்பகுதிக்கு பொருள்கள் வருவதில் முன் எப்பொழுதும் இல்லாத நெருக்கடிகள் ஏற்பட்டன. இந்தக் காலத்தில் வியாபாரிகள் கொள்ளை இலாபம் சம்பாதித்துப் பழகிவிட்டனர். இன்றும் அந்தக் கொள்ளை இலாபத்தை எதிர்பார்த்தே பதுக்கல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த ஆறு மாதகால யுத்தம் மக்களை பல வழிகளில் பெரும் சிரமங்களுக்கு உள்ளாக்கியுள்ளதோடு, பலர் தமது சொத்துக்களை இழக்கவும் செய்துள்ளது. பலர் தமது தொழிலை இழந்துள்ளனர். இதன்காரணமாக அன்றாட வாழ்க்கையைக் கொண்டு செலுத்துவதே அவர்களுக்குப் பெரும் போராட்டமாகவுள்ளது. இந்த நிலையில், வியாபாரிகளின் பதுக்கல் நடவடிக்கைகள் அவர்களின் வாழ்க்கையையே நம்பிக்கை இழக்கச்செய்யும் அளவிற்குச் சென்றுவிடக்கூடியதாகும்.

கடந்த ஆறு மாத காலமாக யுத்தம் நடந்து கொண்டிருந்த வேளையில் மிகவும் அரிதாகவே பொருள்கள் வந்துகொண்டிருந்தன ஆனால், பொருள்கள் கூடிய விலையிலும் பொருள்களைக் கொள்வனவு செய்யக்கூடியதாக இருந்தது. ஆனால் கடந்த வாரம் குறிப்பிடக்கூடிய அளவில் லொறிகள் குடாநாடு வந்தன. சகல அத்தியாவசியப் பொருள்களிலும் திடீர் விலை வீழ்ச்சியும் ஏற்பட்டது.

அதேவேளை, இந்திய வானொலி வெளியிட்ட செய்தியினால் ஆறு மாத யுத்தத்தினால் ஏற்படாத தட்டுப்பாடு, ஒரு வானொலிச் செய்தியில் செயற்கையாக ஏற்பட்டது இதற்கு கடந்த யுத்த காலத்தில் வியாபாரிகள் பெற்ற அபரிமிதமான கொள்ளை இலாப அனுபவமே காரணமாகும்.

யுத்த காலத்தில் பொருள்களுக்கு தட்டுப்பாடுகளும், நெருக்கடிகளும் ஏற்படுவது வழமையான செயற்பாடாக இருப்பினும், அந்தக் காலத்தில் வியாபாரிகள் நாட்டுப் பற்றும், இனப்பற்றும் கொண்டவர்களாக செயற்பட வேண்டும். அவ்வாறு இல்லாத பதுக்கல் வியாபாரிகளுக்கு ஈராக்கிய ஜனாதிபதி சதாம் ஹுசைன் விதித்துள்ள பகிரங்க மரண தண்டனைதான் சரியானதா என மக்களை எண்ண வைக்கிறது.

---

**1974 ஆம் ஆண்டு தைமாதம் இதேதினத்தில் இடம் பெற்ற தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலை களை நினைவு கூருமுகமாக கடந்த இரவு புலி களின் குரல் வானொலியில் ஒலிபரப்பான கட்டுரை அப்படியே பிரசுரமாகிறது.**

...லைத் தமிழ் மக்களது மண்ணில் - யாழ்நகரில் நடாத்துவதே அம்மாநாட்டிற்கு சிறப்பைத் தேடித்தரும் எனவும் அப்போதுதான் ஏகோபித்த தமிழ் மக்களது பங்களிப்பும் ஆதரவும் இம்மாநாட்டிற்குக் கிடைக்க வழியேற்படும் எனவும் உலகத் தமிழாராய்ச்சி மன்ற இலங்கைக் கிளையினர் குறிப்பிட்டனர். இந்த நிலையில் இலங்கைக் கிளையின் தலைவராகவிருந்த நீதியரசர் H. W. தம்பையா அவர்கள் தமிழாராய்ச்சி மாநாடு யாழ்ப்பாணத்தில் இடம்பெறுவதனை விரும்பாமையால் மாநாட்டிலிருந்தும் ஒதுங்கிக் கொண்டார். இதனால் காலஞ்சென்ற பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்கள் இலங்கைக் கிளையின் தலைவராகப் பொறுப்பேற்று மாநாட்டினை யாழ்ப்பாணத்திலேயே நடாத்துவது என முடிவு செய்தார். இதற்கு மறைந்த தமிழ்த் தூதுவர் தனிநாயகம் அடிகளார் உட்பட பல தமிழ் அறிஞர்கள் பெரும் ஆதரவு கொடுத்தனர்.

தமிழ் மக்களால் மதிக்கப்படும் தமிழ் அறிஞர்கள் எல்லோரும் ஒன்று கூடி யாழ்ப்பாணத்தில் இம்மாநாட்டை நடாத்துவது என்ற முடிவை எடுத்த பின்னர்- இலங்கை அரசு இம்மாநாட்டைக் குழப்புவதில் பெரும் அக்கறை காட்டி வந்தது. இம்மாநாட்டில் கலந்து கொள்வதற்காக இலங்கை வர விரும்பிய வெளிநாட்டுத் தமிழ் அறிஞர்களுக்கு விசா வழங்க கடைசி நேரம்வரை இலங்கை அரசு சம்மதிக்கவில்லை. அமெரிக்காவிலிருந்து இலங்கை வந்த ஒரு தமிழறிஞர் கொழும்பில் வைத்துத் திருப்பி அனுப்பப்பட்டார். இலங்கை அரசின் முட்டுக்கட்டைகளுக்கும் கெடுபிடிகளுக்கும் ஒத்திசைவாக பல தமிழர்கள் செயல்பட்டனர். அப்போதைய யாழ்ப்பாண மேயர் அல்பிரட் துரையப்பா, முன்னாள் நல்லூர் பாராளுமன்ற உறுப்பினர் அருளம்பலம், வட்டுக்கோட்டை (பா.உ.) ஆ. தியாகராசா போன்ற மூன்றாம் தர அரசியல் வாதிகளுடன் வடபகுதியிலிருந்த இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சிக்காரர்களும் முற்போக்கு எழுத்தாளர்கள் என்று கூறிக் கொள்வோரும் இம்மாநாட்டைத் தடைசெய்யுமாறு அடிக்கடி சிறிமாவுக்கு தந்தியடித்துக் கொண்டிருந்ததோடு தூதுக்குழுக்களையும் அனுப்பி நேரில் சந்தித்தும் இம்மாநாடு தொடர்பில் பல தவறான விளக்கங்களை அம்மையாருக்குக் கொடுத்துக் கொண்டு இருந்தனர். சில தமிழர்கள் அமைச்சர் குமாரசூரியர் ஊடாக மகஜர்களையும் கையளித்து மாநாட்டைத் தடை செய்யுமாறும் கேட்டனர்.

இறுதியில் தமிழ் அறிஞர்களின் பெரு முயற்சியினால் ... வெளிநாட்டு அறிஞர் வழியனுப்பு வைபவத்தையும் குழப்பு முகமாக யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரியாகவிருந்த ஏ.எஸ்.பி. சந்திரசேகராவின் தலைமையில் ஒரு பொலிஸ் பட்டாளத்தையே ஏவி விட்டார்.

யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த சிங்களப் பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தும் மின்வயர்களை அறுத்து வீழ்த்தியும் செய்த அடாவடித்தனங்களால் ஒன்பது தமிழர்கள் (இவர்களில் பெரும்பாலானோர் இளைஞர்கள்) அநியாயமாக வீரசிங்கம் மண்டப முன்றலில் வைத்து உயிர்காவு கொள்ளப்பட்டனர், பெண்கள் அவமானப்படுத்தப்பட்டனர். அங்கே கூடியிருந்த சுமார் பத்தாயிரம் மக்கள் அவலப்பட்டனர். பொலிஸாரின் தடியடிப் பிரயோகத்தினால் பலர் படுகாயமுற்றனர். பலர் உடைமைகளை இழந்தனர்.

இந்த அவல நிகழ்வு தமிழ் இளைஞர்களை புதிய கோணத்தில் சிந்திக்க வைத்ததோடு புதிய அணுகு முறைகளை அவர்கள் நாடவும் காரணமாயிற்று. அரசியல் சார்பற்ற ஒரு கலாசார நிகழ்ச்சியைத்தானும் நடாத்த இலங்கைத் தமிழருக்கு உரிமையில்லையென்ற அப்பட்டமான அடிமை நிலைமை வெளிச்சம் போட்டு காட்டப்பட்டது. இம்மாநாட்டில் தமிழ் கேட்க வந்து இரத்தம் சிந்தியோர் எழுப்பிய அவலக்குரலும் அழுத கண்ணீரும் தமிழ் இளைஞர்களது நாடி நரம்புகளிக்கூடாகப் பாய்ந்தது.

இதேவேளையில் இம்மாநாட்டில் இடம்பெற்ற அவலங்கள் பற்றி ஆராயுமுகமாக யாழ்ப்பாணப் பிரஜைகளால் பக்க சார்பற்ற முறையில் நியமிக்கப்பட்ட ஒய்வு பெற்ற நீதியரசர் இரண்டர் ஆணைக்குழுவின் விதப்புரைகளை இலங்கை அரசு புறக்கணித்ததோடு இம்மாநாட்டுப் படுகொலைகளை முன்னின்று நடாத்திய ஏ. எஸ். பி. சந்திரசேகராவுக்கு பதவியுயர்வும் கொடுத்துப்பாராட்டியது.

தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலைகளை நேரில் பார்த்த உரும்பராய் சிவகுமாரன் இதன் பின்னர் அதிதீவிரவாதியாக மாறினான். இக்கொலைகளைப் புரிந்த ஏ. எஸ். பி. சந்திரசேகராவுக்கும் அதற்கு தூண்டுகோலாக இருந்த மேயர் அல்பிரட் ... கமே ... பட்ட நிலையில் விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்த முதல் இலக்காகவும் விளங்கியது.

இவ்வியக்கத்தின் முதல் நடவடிக்கையாக நான்காவது தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலைகளுக்கு மூலகாரணமாக இருந்த மேயர் அல்பிரட் துரையப்பாவுக்கு பொன்னாலையில் வைத்து மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது. இந்த நடவடிக்கைக்கு விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களே தலைமை வகித்தார். அவர் தலைமையிலான போராளிகள் தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலைக்கு காரணமாக இருந்த துரையப்பாவுக்கு மரண தண்டனை நிறைவேற்றி தியாகி சிவகுமாரனது கனவை நனவாக்கியதோடு ஆயுதப் போராட்டத்திற்கு உத்வேகமும் ஊட்டினார்கள்.

நான்காவது தமிழாராய்ச்சி மாநாட்டின் போது இறந்த 9 தமிழர்களுக்கும் வருடா வருடம் அஞ்சலி செலுத்துமுகமாகவும் சம்பிரதாய பூர்வமான சமயச் சடங்குகளைச் செய்யவும் பொது மக்களும் இறந்த அந்த 9 தமிழர்களது குடும்பத்தினரும் வீரசிங்கம் மண்டப முன்றலில் 9 நினைவுத் தூபிகளை அமைத்தார்கள். 1975 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் அமைக்கப்பட்ட இந்தத் தூபிகளை யாழ்ப்பாணப் பொலிசார் அடித்து நொருக்கினார்கள். இந்த நிலையில் மீண்டும் 1976 ஆம் ஆண்டு தமிழ் இளைஞர்கள் ஒரு பெரிய தூபியை அந்த 9 தமிழ் உயிர்கள் காவு கொள்ளப்பட்ட அதே இடத்தில் அமைத்தார்கள். அதனையும் பொலிசார் மீண்டும் உடைத்தார்கள். இதே பொலிசார் தான் 1981 ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பொது நூலகத்தையும் எரித்தார்கள். யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையப் பொலிசார் செய்து வந்த கொடுமைகளுக்கு முற்றுப் புள்ளி வைக்க எண்ணிய விடுதலைப் புலிகள் 1985 ஆம் ஆண்டு தளபதி கிட்டு தலைமையில் யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தையும் அதன் அருகில் அமைந்திருந்த பிரதிப் பொலிஸ் மா அதிபரின் காரியாலயக் கட்டடத்தையும் தகர்த்துத் தரைமட்டமாக்கியதோடு ஒரு பொலிஸ் காரனையும் சிறைப்பிடித்தனர்.

இதன் பின்னர் கோட்டைக்குள் குடியிருந்த பொலிசாரின்

(2ஆம் பக்கம் பார்க்க)

பேக்கருடன் பேச்சு நடாத்த

# அழகிய ஜெனிவா வந்ததையிட்டு தாரிக் அஸிஸ் மகிழ்ச்சி

(லண்டன்)

பரபரப்புடன் எதிர்பார்க்கப்பட்ட பேக்கர் - தாரிக் அஸீஸ் சந்திப்பு நேற்றுக் காலை ஜெனிவாவில் ஆரம்பிக்கப்பட்டது. சந்திப்பு ஆரம்பமாவதற்கு முன்பு விமான நிலையத்தில் செய்தியாளரிடம் பேசிய அமெரிக்க வெளியுறவுச் செயலர் பேக்கர் குவைத்தை விட்டு வெளியேறுவதைத் தவிர ஈராக்கிற்கு வேறு வழியே இல்லை என்பதை உணர்த்தப் போவதாகக் குறிப்பிட்டார்.

அதேவேளை ஜெனிவா வந்தடைந்த ஈராக்கிய வெளியுறவு அமைச்சர் தாரிக் அஸீஸ் செய்தியாளரிடம் பேசுகையில் ஜெனிவா ஒரு அழகிய எழில் வாய்ந்த நகரம் இங்கு வருகை தந்தமையினால் மகிழ்ச்சியடைகின்றேன் எனக் குறிப்பிட்டதுடன், எந்தவித அச்சுறுத்தலுக்கும் ஈராக் அடிபணியாது எனக் கூறியுள்ளார்.

சுமார் இரண்டரை மணி நேரமாக நீடித்த பேச்சுவார்த்தையில் இருதரப்பிலும் தலா ஒன்பது பேர் பங்கு கொண்டனர். மதிய இடைவேளைக்காக ஒத்தி வைக்கப்பட்ட சந்திப்பு பிற்பகல் மூன்று மணியளவில் மீண்டும் ஆரம்பித்தது. இதடையில் பேக்கர், அதிபர் புஷ்சுடன் பதினைந்து நிமிடம் தொலைபேசியில் பேசியுள்ளார். பேச்சுவார்த்தைகள் கனிவாகவும், சுமுகமாகவும் தொடர்வதாக பி.பி.ஸி. அறிவித்தது.

இதனிடையில் பல்வேறு ஊகச்செய்திகள் அடிபடுவதாக தெரிகிறது. குறிப்பாக ஐ. நாவின் காலக்கெடு மேலும் நீடிக்கப்படலாம் என்றும், பேக்கர் - தாரிக் அஸீஸ் பேச்சுவார்த்தை முறிவடையுமானால் ஐரோப்பிய சமூக நாடுகள் மீண்டுமொரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தலாம் என்றும் இன்னும் பலவாறாகவும் ஊகங்கள் தெரிவிக்கப்படுகின்றன.

# சுப்பிரமணியம் சுவாமியை பதவி விலகக் கோரிக்கை

(புதுடில்லி)

கடந்த ஒரு மாதத்தில் இரு தடவை சர்ச்சைக்கு உள்ளாகி இருக்கும் மத்திய சட்டத்துறை அமைச்சர் சுப்பிரமணியம்சுவாமி தமது பதவியை இராஜினாமா செய்ய வேண்டும் என்று சந்திரசேகர் அரசுக்கு ஆதரவு தெரிவிக்கும் காங்கிரஸ் கட்சி கோரியுள்ளது. ஏற்கனவே சபாநாயகர் ரவிராயை மிரட்டியதாக சுப்பிரமணியம் சுவாமி மீது கலந்த குற்றச் சாட்டுக்கள் எழுந்தது தெரிந்ததே. தற்போது சர்வதேச நாணய நிதியத்திடம் (ஐ எம் எப்) கடன் வாங்கும் ஒப்பந்தத்தில் தாம் கையெழுத்திடப் போவதாக கூறியிருப்பதும் அமைச்சரின் தவறான போக்குகளே என்றும் காங்ரஸ் கட்சி சுட்டிக்காட்டியுள்ளது. மேலும் ஐ எம்.எப் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை இந்திய அரசு நடத்திக்கொண்டிருக்கும் இத் தருணத்தில் வெளியிடப்பட்ட அறிக்கை தாமதமின்றி ரத்துச் செய்யப்பட வேண்டும் என்றும் அக் கட்சி கோரியிருக்கின்றது.

# கடலில் மிதந்து வந்த இளைஞரின் சடலம்

(அராலி)

கடலில் மிதந்து கொண்டிருந்த நிலையில் முப்பது வயது மதிக்கத்தக்க இளைஞர் ஒருவரின் சடலம் ஒன்று காரைநகர் கோவளம் கடற் பகுதியில் மீனவர்களால் மீட்கப்பட்டது.

இச் சடலம் எவராலும் அடையாளம் காணப்படாத நிலையில் இன்று அப் பகுதியிலேயே அடக்கம் செய்து வைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச் சடலம் சிறிலங்கா கடற்படையிடம் இருந்து தப்புவதற்காக கடந்த ஞாயிற்றுக்கிழமை கடலில் பாய்ந்த படகோட்டி ஒருவருடையதாக இருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.

# லோக்சபா சபாநாயகர் அதிகாரம் நீதிமன்ற வரம்பிற்கு உட்படாதது

— சந்திரசேகர்

(டில்லி)

'லோக்சபா' சபாநாயகரின் அதிகாரம் நீதிமன்றங்களின் அதிகார வரம்புக்கு உட்படுத்தப்படமுடியாததுஎன்று நிதியப் பாராளுமன்றமான 'லோக்சபா'வில் நேற்று பிரதமர் சந்திரசேகர் உறுதிபடக் கூறினார். இதனைத் தொடர்ந்து எதிர்க்கட்சியினர் கொண்டு வந்த பிரேரணையொன்றை வாபஸ் வாங்கிக் கொண்டனர்.

அதேவேளை எஸ் கட்சி உறுப்பினர்கள் 37 பேரின் விடயத்தில் முன்பிருந்த நடப்பு நிலையையே தொடர்ந்து பராமரிக்குமாறு டில்லி உயர் நீதிமன்றம் வெளியிட்டுள்ள ஆணையை புறக்கணித்துள்ளதாக சபாநாயகர் ரவிராய் அறிவித்துள்ளார்.

நேற்று லோகசபா கூடிய போது கேள்வி நேரத்தின் போது அதனை ஒத்திவைத்து உயர் நீதிமன்ற ஆணை தொடர்பாக பேசிய சபாநாயகர் ரவிராய் இதனைத் தெரிவித்தார்.

நேற்றுக்காலை இதுதொடர்பாக தாம் அனைத்துக் கட்சிகளின் கூட்டமொன்றைகூட்டி எல்லாக் கட்சித் தலைவர்களுடனும் கதைத்ததாகவும், அவர்கள் கூறியதன் பிரகாரமே இந்த முடிவு எடுக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இதற்கு முன்னதாக ஜனதா சன் கட்சி தமது சியில் இருந்து விலகிய 37 பாராளுமன்ற உறுப்பினர்களும் தமது கட்சியில் கட்டுப்பாட்டை மீறியதால் கட்சியில் இருந்து விலக்கி விட்டதாக அறிவித்திருந்தனர். அத்துடன் அவர்கள் தகு நீக்கம் செய்யப்பட வேண்டும் எனவும் கேட்டிருந்தனர்.

இதன் படி கட்சித் தாவல் தடுப்புச் சட்டத்தின் கீழ் இது சபாநாயகரால் விசாரணை செய்யப்பட்டு வந்தது. இதற்கிடையில் டில்லி உயர் நீதிமன்றத்தில் இது வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வந்தது. இப்பொழுது சபாநாயகருக்கான ஆணையையும் நீதிமன்றம் விடுத்துள்ளது.

இந்த விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய எதிர்க் கட்சித் தலைவர் எல் கே அத்வானி சபாநாயகருக்கும் பாராளுமன்றத்திற்கும் இடையில் உள்ள கண்ணியத்தையும் உரிமைகளையும் கட்டிக்காக்க அரசாங்கம் தவறிவிட்டது என்று குற்றஞ்சாட்டினார்

அத்துடன் சபாநாயகருக்கு வழங்கப்பட்டுள்ள பதவி நீக்க அதிகாரம் அரசியல் சாசனத்தின் 10 வது அட்டவணையின் கீழ் உள்ளது என்றும் எந்த நீதிமன்றம் விசாரணைக்கும் இது அப்பாற்பட்டது என்றும் எல். கே. அத்வானி தெரிவித்தார். அரசியல் சாசனத்தில் மாற்றம் செய்ய விரும்பினால் அதனை பாராளுமன்றம் தான் முடிவு செய்ய வேண்

ஒருதமிழர்

முகாமில் இருந்து வெளியேறியஇராணுவத்தினர்படுவான் கரைப் பகுதியில் இபளமுத்து மகாலிங்கம் (வயது 35) எனபவரை கைது செய்தனர். இவரை வவுணதீவுக்கு அழைத்துச்சென்ற இராணுவத்தினர் உயிருடன் ரயர் போட்டு எரித்தனர். (க)

நான்காம் கட்ட

பயன்படுத்தப்பட இருக்கின்றது.

எனவே இவ்விநியோகத்தின் போது வழமையான விநியோக அளவுத் திட்டத்தில் அரிசி விநியோகிக்கப்பட உள்ளது (க)

7 நாள் யுத்தநிறுத்த

மும் அக்கறையும் இருப்பதாகத் தெரியவில்லை.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் நிபந்தனையற்ற முறையில் காலவரையற்ற போர் நிறுத்தத்தை பிரகடனப்படுத்தியதுடன் சமாதானப் பேச்சுகளுக்கு தயாரென அறிவித்தது ஒருதலைப்பட்சமான முறையில் தாம் பிரகடனம் செய்த போர் நிறுத்த

கப்பட்டிருப்பதுபோல இந்த நிபந்தனைகள் அமைந்திருக்கின்றன. இதன் காரணமாகவே அரச படைகள் பொறுப்பற்ற முறையில் போர் நிறுத்தத்தை மீறி வருகின்றன.

தமிழீழத்தில் சமாதானத்தையும் சகஜ நிலையையும் உருவாக்கி சமரசப் பேச்சுக

ஜனநாயக

யில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசும்போது முதலமைச்சர் மு. கருணாநிதி தெரிவித்தார்.

அப்படியே இரு இயக்கங்களுக்கிடையே தொடர்பிருப்பதாக வைத்துக்கொண்டாலும், தக்கசமயத்தில் அதைக் கண்டுபிடித்து நடவடிக்கை எடுப்பது மத்திய அரசின் பொறுப்பாகு என்று அவர் மேலும் தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் பேசுகையில்;

தமிழ் நாட்டில் போராளிகளின் சட்ட ஒழுங்கு மீறல் நடவடிக்கைகளை அரசாங்கம் சகித்துக் கொள்ளாது தமிழ் நாட்டில் இந்தப் போராளிகளால் சட்ட ஒழுங்கு நிலை மோசமடைந்துவிட்டதுஎன்று கூறுவது உண்மையல்ல என்றும், தமிழகத்தில் போராளிகள் 1983 ஆம் ஆண்டு முதல் இருக்கிறார்கள் என்றும், மத்திய அரசின் பணிப்புரைகளுக்கிணங்கப் போராளிகள் தனித்தனி முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை இந்திராகாங்கிரஸ் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில், தமிழ் நாட்டில் தி.மு.க அரசாங்கம் தேச நலன்களுக்கு எதிராக நடந்து கொள்கிறது என்றும், அதனால் பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்றும் மத்திய அரசைக் கேட்டுள்ளது.

மேலும், அசாம், பஞ்சாப் புரட்சிவாதிகளுடன் விடுதலைப் புலிகளுக்குத் தொடர்பு

# கிணற்றினுள் சிறுவன் மூழ்கி மரணம்

தண்ணீர் எடுக்கச் சென்ற சிறுவன் கிணற்றுக்குள் தவறி விழுந்து நீரில் மூழ்கி மரணமடைந்துள்ளார்.

நேற்று மாலை ஆரியகுளத்தடியைச் சேர்ந்த அப்பாப்பிள்ளை குசியந்தகுமார் (வயது 4) என்ற சிறுவன் கிணற்றுக்குள் தவறி வீழ்ந்து நீரில் மூழ்கியபோது இவரை மீட்டு வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டபோதிலும் இவர் மரணமடைந்துள்ளார். (85)

இந்திய

விடுதலைப்புலிகளாகிய நாங்கள் தமிழீழ மக்களின் சுதந்திரத்திற்காகப் போராடிக்கொண்டிருக்கின்ற ஒரு விடுதலை அமைப்பு. இந்திய அரசியலிலோ அல்லது இந்தியாவின் உள்விவகாரங்களிலோ தலையிடும் நோக்கம் எமக்கு இல்லை. இந்திய மக்களை எங்களுடைய நேச சக்திகளாகத்தான் பார்க்கின்றோம்.

தமிழீழ மக்களின் பேராதரவுடன் அளப்பரிய தியாகங்களுக்கு மத்தியில் போராடிக் கொண்டிருக்கும் எமது இயக்கத்தின்மீது இத்தகைய அபாண்டமான பழிகளையும்

அதிகாரம் நீதிமன்றங்களின் அதிகார வரம்புக்கு உட்படுத்தப்படமுடியாததுஎன்று நியப் பாராளுமன்றமான 'லோக்சபா'வில் நேற்று பிரதமர் சந்திரசேகர் உறுதிபடக் கூறினார். இதனைத் தொடர்ந்து எதிர்க்கட்சி

**ஒருதமிழர்**

முகாமில் இருந்து வெளியே நியஇராணுவத்தினர்டுவான் கரைப் பகுதியில் இலைமுத்து மகாலிங்கம் (வயது 35) என்பவரை கைது செய்தனர். இவரை வவுனதீவுக்கு அழைத்துச்சென்ற இராணுவத்தினர் உயிருடன் ரயர் போட்டு எரித்தனர். (க)

**நான்காம் கப்ட**

பயன்படுத்தப்பட இருக்கின்றது.

எனவே இவ்விநியோகத்தின் போது வழமையான விநியோக அளவுத் திட்டத்தில் அரிசி விநியோகிக்கப்பட உள்ளது (க)

### 7 நாள் யுத்தநிறுத்த

மும் அக்கறையும் இருப்பதாகத் தெரியவில்லை.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் நிபந்தனையற்ற முறையில் காலவரையற்ற போர் நிறுத்தத்தை பிரகடனப்படுத்தியதுடன் சமாதானப் பேச்சுகளுக்கு தயாரென அறிவித்தது ஒருதலைப்பட்சமான முறையில் நாம் பிரகடனம் செய்த போர் நிறுத்தத்தால் செய்வதறியாது தடுமாறிய சிறிலங்கா அரசு மூன்று நாட்கள்வரை ஆலோசித்துவிட்டு ஒரு பதிலறிக்கையை வெளியிட்டது. இந்த அறிக்கையில் காலவரையற்ற எமது போர் நிறுத்தத்திற்குப் பதிலாக 7 நாள காலவரம்பு விதித்து தாக்குதல் இடைநிறுத்த அறிவித்தல் ஒன்றை அரசு வெளியிட்டது. இந்த தற்காலிக தாக்குதல் இடைநிறுத்தத்திற்கு ஒருதலைப்பட்சமான பல நிபந்தனைகளையும் விதித்துக்கொண்டது. இந்தக் கடும் நிபந்தனைகள் இரு தரப்பினருக்கும் இடையில் போர் நிறுத்தத்தை பேணுவதற்கு வழிகோலுவதாக அமையவில்லை. மாறாக ஆயுதம் தரித்தோர் மீது தாக்குதல் மேற்கொள்ளும் உரிமை, தேடுதல் வேட்டையைத் தொடரும் அதிகாரம் ஆகியன ஆயுதப்படைகளுக்கு உண்டு என்று இந்த நிபந்தனைகள் வலியுறுத்துகின்றன. எனவே, அரசு தரப்பில் வெளியிடப்பட்ட பிரகடனம் உண்மையான போர் நிறுத்த அறிவித்தல் என்று சொல்ல முடியாது. எந்த சந்தர்ப்பத்திலும்போர் நிறுத்த மீறல்களை செய்யும்வகையில் அரச படைகளுக்கு உரிமை வழங்கப்பட்டிருப்பதுபோல இந்த நிபந்தனைகள் அமைந்திருக்கின்றன. இதன் காரணமாகவே அரச படைகள் பொறுப்பற்ற முறையில் போர் நிறுத்தத்தை மீறி வருகின்றன.

தமிழீழத்தில் சமாதானத்தையும் சகஜ நிலையையும் உருவாக்கி சமரசப் பேச்சுக்கான தகுந்த சூழ்நிலையை ஏற்படுத்துவதாயின் சிறிலங்கா அரசு காலவரையற்ற முழுமையான போர் நிறுத்தத்தை பிரகடனம் செய்வது அவசியம். அதே சமயம், ஆயுதப்படைகள் போர் நிறுத்தத்தை மீறாதவண்ணம் அரசு உருப்படியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். போர் நிறுத்த விதிகள், கட்டுப்பாடுகள் குறித்து விடுதலைப்புலிகளுடன் பேசி இணக்கம் காணப்பட வேண்டும்.

சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்குச் சிறிலங்கா அரசு முன் நிபந்தனைகளை விதித்துள்ளது எமக்கு ஏமாற்றத்தைக் கொடுக்கிறது. பேச்சுவார்த்தைக்கு எவ்வித முன் நிபந்தனைகளையும் நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. நிபந்தனையற்ற பேச்சுக்களையே நாம் விரும்புகிறோம்.

விடுதலைப் புலிகள் இயக்கம் ஏற்கனவே பிரகடனம் செய்ததற்கு அமைய தொடர்ந்து காலவரையற்ற போர் நிறுத்தத்தை கடைப்பிடிக்கும். சமாதானத்திற்கும் பேச்சுக்கள் வாயிலான அரசியல் தீர்வுக்கும் வழிகோலும் இந்த அரிய சந்தர்ப்பத்தை சிறிலங்கா அரசு அசட்டை செய்ய மாட்டாது என நம்புகிறோம்.

வாபஸ் வாங்கிக் கொண்டனர்.

அதேவேளை எஸ் கட்சி உறுப்பினர்கள் 37 பேரின் விடயத்தில் முன்பிருந்த நடப்பு நிலையையே தொடர்ந்து பராமரிக்குமாறு டில்லி உயர் நீதிமன்றம் வெளியிட்டுள்ள ஆணையை புறக்கணித்துள்ளதாக சபாநாயகர் ரவிராய் அறிவித்துள்ளார்.

நேற்று லோக்சபா கூடிய போது கேள்வி நேரத்தின் போது அதனை ஒத்திவைத்து உயர் நீதிமன்ற ஆணை தொடர்பாக பேசிய சபாநாயகர் ரவிராய் இதனைத் தெரிவித்தார்.

நேற்றுக்காலை இதுதொடர்பாக தாம் அனைத்துக் கட்சிகளின் கூட்டமொன்றைகூட்டி எல்லாக் கட்சித் தலைவர்களுடனும் கதைத்ததாகவும், அவர்கள் கூறியதன் பிரகாரமே இந்த முடிவு எடுக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இதற்கு முன்னதாக ஜனதா சன் கட்சி [illegible] சிபில்

இருந்து விலகிய 37 பாராளுமன்ற உறுப்பினர்களும் தமது கட்சியில் கட்டுப்பாட்டை மீறியதால் கட்சியில் இருந்து விலக்கி விட்டதாக அறிவித்திருந்தனர். அத்துடன் அவர்கள் தகுதி நீக்கம் செய்யப்பட வேண்டும் எனவும் கேட்டிருந்தனர்.

இதன் படி கட்சித் தாவல் தடுப்புச் சட்டத்தின் கீழ் இது சபாநாயகரால் விசாரணை செய்யப்பட்டு வந்தது. இதற்கிடையில் டில்லி உயர் நீதிமன்றத்தில் இது வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வந்தது. இப்பொழுது சபாநாயகருக்கான ஆணையையும் நீதிமன்றம் விடுத்துள்ளது.

இந்த விவாதத்தில் கலந்துகொண்டு பேசிய எதிர்க் கட்சித் தலைவர் எல். கே. அத்வானி சபாநாயகருக்கும் பாராளுமன்றத்திற்கும் இடையில் உள்ள கண்ணியத்தையும் உரிமைகளையும் கட்டிக்காக்க அரசாங்கம் தவறிவிட்டது என்று குற்றஞ்சாட்டினார்.

அத்துடன் சபாநாயகருக்கு வழங்கப்பட்டுள்ள பதவி நீக்க அதிகாரம் அரசியல் சாசனத்தின் 10 வது அட்டவணையின் கீழ் உள்ளது என்றும் எந்த நீதிமன்றம் விசாரணைக்கும் இது அப்பாற்பட்டது என்றும் எல். கே. அத்வானி தெரிவித்தார். அரசியல் சாசனத்தில் மாற்றம் செய்ய விரும்பினால் அதனை பாராளுமன்றம் தான் முடிவு செய்ய வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

**சுன்னாகம்**

சைப் பெற்றுக்கொண்டவரின் அவற்றுக்கான கொடுப்பனவுகளும் மேற்கொள்ளப்படும். இவர்களுக்கு நிதிவசதியைப் பொறுத்தே முன்னுரிமை வழங்கப்படும். இத்தகவலை சுன்னாகம் தபால் அதிபர் இ. திருநாவுக்கரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கிறது.

**வளைகுடா**

1000 எண்ணெய் நிலைகளில் இருந்து நாளாந்தம் 30 லட்சம் பீப்பாய் எண்ணெய் எரியும். இதனால் உலகின் சுற்றாடல் பெரும் பாதிப்புக்கு உள்ளாகும். காலநிலை பெருமளவில் மாறுதலடையும். எண்ணெய் நிலைகள் எரிவதன் மூலம் தோன்றக் கூடிய புகை மண்டலம் அணு வெடிப்பு ஒன்றிலிருந்து உருவாகக் கூடிய புகை மண்டலத்தை ஒத்ததாக இருக்கும். இந்த தீயை அணைக்க ஒன்பது மாதங்கள்வரை தேவைப்படலாம் எனவும் கருத்துக் கூறியிருக்கும் விஞ்ஞானிகள் ஆசியாவில் வருடமழை பெய்வதில் சிக்கல்கள் தோன்றும் எனவும், அமில மழை பெய்யக் கூடிய நச்சுப் பதார்த்தங்கள் காற்றில் கலக்கப்படலாம் எனவும் எச்சரித்துள்ளனர்.

யில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசும்போது முதலமைச்சர் மு. கருணாநிதி தெரிவித்தார்.

அப்படியே இரு இயக்கங்களுக்கிடையே தொடர்பிருப்பதாக வைத்துக்கொண்டாலும், தக்கசமயத்தில் அதைக் கண்டுபிடித்து நடவடிக்கை எடுப்பது மத்திய அரசின் பொறுப்பாகும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் பேசுகையில்;

தமிழ் நாட்டில் போராளிகளின் சட்ட ஒழுங்கு மீறல் நடவடிக்கைகளை அரசாங்கம் சகித்துக் கொள்ளாது தமிழ் நாட்டில் இந்தப்போராளிகளால் சட்ட ஒழுங்கு நிலை மோசமடைந்துவிட்டதுஎன்று கூறுவது உண்மையல்ல என்றும், தமிழகத்தில் போராளிகள் 1983 ஆம் ஆண்டு முதல் இருக்கிறார்கள் என்றும், மத்திய அரசின் பணிப்புரைகளுக்கிணங்கப் போராளிகள் தனித்தனி முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை இந்திராகாங்கிரஸ் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில், தமிழ் நாட்டில் தி. மு. க அரசாங்கம் தேச நலன்களுக்கு எதிராக நடந்து கொள்கிறது என்றும், அதனால் பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்றும் மத்திய அரசைக் கேட்டுள்ளது.

மேலும், அசாம், பஞ்சாப் புரட்சிவாதிகளுடன் விடுதலைப் புலிகளுக்குத் தொடர்பு இருக்கிறது என்று பிரதம மந்திரி சந்திரசேகர் கூறியிருக்கிறார் என்றும், நாட்டின் ஒருமைப்பாட்டுக்குத் தீங்கு விளைவிக்கும் சக்திகளுக்கு எதிராக உண்மையான நடவடிக்கை எடுக்கத் தமிழ்நாடு அரசு மறுத்து வருகிறது என்றும் இந்திரா காங்கிரஸ் அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

**குமணவில்**

டர்களும் எடுத்துவரப்பட்டுள்ளன.

கடந்த மாதம் விசேட சிகிச்சைக்காக கொழும்புக்குச் சென்றிருந்த நோயாளிகளின் சிகிச்சைகளை முடித்துக் கொண்ட சுமார் பன்னிரெண்டுபேரும் வந்து சேர்ந்துள்ளனர். (க)

**மா விலை**

எடுத்து சிறிலங்காஅரசாங்கத்தினால் மாவினதும், பாணினதும்விலைகள் குறைக்கப்பட்டிருக்கிறது. கோதுமை மாவின் விலை கிலோ ஒன்றுக்கு ஒரு ரூபாவினாலும், பாணின் விலை நாற்பது சதத்தினாலும் உத்தியோகபூர்வமாக குறைக்கப்பட்டுள்ளது.

**தெரிவான**

தோற்றி தெரிவுசெய்யப்பட்ட ஆசிரிய மாணவர்களின் பட்டியல்களும் பயிற்சிக் கலாசாலைகளில் வைக்கப்பட்டுள்ளன. (மு)

படகோட்டி ஒருவருடையதாக இருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.

### கிணற்றினுள் சிறுவன் மூழ்கி மரணம்

தண்ணீர் எடுக்கச் சென்ற சிறுவன் கிணற்றுக்குள் தவறி விழுந்து நீரில் மூழ்கி மரணமடைந்துள்ளார்.

நேற்று மாலை ஆரியகுளத்தடியைச் சேர்ந்த அப்பாப்பிள்ளை குசியந்தகுமார் (வயது 4) என்ற சிறுவன் கிணற்றுக்குள் தவறி வீழ்ந்து நீரில் மூழ்கியபோது இவரை மீட்டு வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டபோதிலும் இவர் மரணமடைந்துள்ளார். (85)

**இந்திய**

விடுதலைப்புலி களாகிய நாங்கள் தமிழீழ மக்களின் சுதந்திரத்திற்காகப் போராடிக்கொண்டிருக்கின்ற ஒரு விடுதலை அமைப்பு. இந்திய அரசியலிலோ அல்லது இந்தியாவின் உள்விவகாரங்களிலோ தலையிடும் நோக்கம் எமக்கு இல்லை. இந்திய மக்களை எங்களுடைய நேச சக்திகளாகத்தான் பார்க்கின்றோம்.

தமிழீழ மக்களின் பேராதரவுடன் அளப்பரிய தியாகங்களுக்கு மத்தியில் போராடிக் கொண்டிருக்கும் எமது இயக்கத்தின்மீது இத்தகைய அபாண்டமான பழிகளையும் பொய்க் குற்றச்சாட்டுக்களையும் சுமத்த வேண்டாமென இந்திய மத்திய அரசைக் கேட்டுக்கொள்கின்றோம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**ஆளுனர்**

இழுக்கு எனவும், மாகாண சபைகள் மூலம் அதிகாரப் பரவலாக்கல் செய்யும் திட்டத்தை தவிடுபொடியாக்குவதாக அமைவதாகவும் குறிப்பிட்டுள்ளார். எதிர்க்கட்சி அங்கத்தவர் திரு. வில்லியம் இந்தப் பிரச்சினைமீது பேசுகையில், வடக்கு - கிழக்கில் மீண்டும் யுத்தத்தை ஆரம்பித்தது தமிழர்களோ-சிங்களவர்களோஅல்லது சப்பிரமூவா மாகாணசபையோ அல்ல. இந்த அரசாங்கமே அதனைச் செய்தது. ஆகையினால் மாகாணசபை அந்த யுத்தத்திற்கு நிதிஒதுக்க வேண்டிய அவசியமில்லைஎனக்கூறினார்

**போர நிறுத்த**

கத் தலைமையகம் கொழும்பில் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. மனிதநேய சேவைகளில் மட்டும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் நாட்டமுடையது என்றும், போர் நிறுத்த கண்காணிக்கும் மரபு செஞ்சிலுவைச் சங்கத்திடம் இல்லை என்றும் அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 10 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.